மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

A Voice of protest against sexual Violence in "Idaaveni" Short Story Collection of Nirupa

T. Megarajah

Lecturer, Tamil Studies, Eastern University, Sri Lanka

Manuscript ID : **MT162A0091**

Volume : **2**

Issue : **4**

Month : **December**

Year : **2022**

Received: 05.11.2022
Revised: 11.11.2022
Accepted: 17.11.2022
Published: 22.11.2022

Pages : 111-118

DOI: 10.5281/zenodo.7372554

ABSTRACT:

Diaspora Tamil Writers are important in the growth of Eelam Tamil Literature. As a Diaspora Tamil Writer Nirupa has Written Several Literary Works. She currently Lives in Canada. This Research is based on her 'IDAAVENI' Short story collection. It is presented in a feminist Perspective. This Research Highlights Sexual Violence against women. Short Stories in this collection express strong opposition to the patriarchal society. Many Short Stories indicate that women are victimized not only by their husbands but also by other men. Nirupa boldly presented her Ideas.

KEYWORDS:

Diaspora Writers, Feminist Perspective, Sexual Violence, Women

நிரூபாவின் "இடாவேணி" சிறுகதைத் தொகுப்பில் பாலியல் வன்முறைக்கெதிரான எதிர்ப்புக்குரல்

த. மேகராசா,
விரிவுரையாளர்,
தமிழ் கற்கைகள் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கட்டுரைச் சுருக்கம்

ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் புகலிடத் தமிழ் எழுத்தாளர்கள் முக்கியம் பெறுகின்றனர். புகலிடத் தமிழ் எழுத்தாளராகிய நிருபா பல கவிதை, சிறுகதை, கட்டுரை என பல ஆக்கங்களை எழுதியுள்ளார். இவர் தற்போது புலம்பெயர்ந்து கனடாவில் வசிக்கிறார். இவரது 'இடாவேணி' என்ற சிறுகதைத் தொகுப்பை அடிப்படையாகக் கொண்டு பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகளை எடுத்துக்கூறுவதாக இவ்வாய்வு அமைகின்றது. பெண்ணிலைவாத நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இத்தொகுப்பிலுள்ள சிறுகதைகள் ஆணாதிக்க சமூகத்தின் அதிகாரக் கட்டமைப்பின் மீது பலமான எதிர்ப்பினை வெளிப்படுத்துகின்றன. கணவனால் மட்டுமன்றி பிற ஆண்களாலும் பெண்கள் பாதிக்கப்படுவதை பல சிறுகதைகள் குறிப்பிடுகின்றன. துணிச்சலொடு நிரூபா தனது கருத்துக்களை அழுத்தமாகவும் வெளிப்படையாகவும் முன்வைத்துள்ளமை சிறப்புக்குரியதாகும்.

கருச்சொற்கள்

புகலிட எழுத்தாளர்கள், பெண்ணிலைவாத நோக்கு, பாலியல் வன்முறை, பெண்கள்

முன்னுரை

நவீன சிந்தனை எழுச்சியின் வெளிப்பாடாக, அடக்குமுறைகளுக்கெதிரான போராட்டங்கள் முக்கியம்பெறத் தொடங்கிய சூழலில் காலங்காலமாகப் பெண்கள் துன்புறுத்தப்படுவது பற்றிய பிரச்சினையும் முக்கிய கவனிப்புக்குரியதானது. கீழைத்தேய நாடுகளைப் பொறுத்தவரையில் காலனிய சூழல் பெண்கள் கல்வி பெறவும் நவீன சிந்தனைகளைப் பெற்று தம் இருப்பு மற்றும் கடந்த காலம் ஆகியவற்றைப் பற்றி சிந்திக்கவும் தமக்கெதிரான அடக்குமுறைகளுக்கெதிராக கேள்விகேட்கவுமான சிந்தனைப்புலத்தைத் தோற்றுவித்தது. ஆண் முதன்மைச்சமூகம் உருவாக்கிய பெண்ணுக்கெதிரான கட்டமைப்பின் மீது பலமான விமர்சனத்தை முன்வைப்பதோடு பெண்களின் அடையாளத்தை, தனித்துவத்தை நிலைநிறுத்தும் போக்கைக்கொண்டதாக

பெண்ணிலைவாதம் வளர்ச்சி பெற்றது. பெண்ணிலைவாதச் சிந்தனையில் ஆணாதிக்க எதிர்ப்பு முக்கிய கருத்தியலாக அமைந்துள்ளது. புலம்பெயர் எழுத்தாளரான நிரூபாவின் இடாவேணி சிறுகதைத் தொகுப்பை அடிப்படையாகக்கொண்டு பெண்நிலைவாத நோக்கில் அச்சிறுகதைகளில் காணப்படும் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறையை எடுத்துக்கூறுவதாக இவ்வாய்வு அமைகிறது.

பாலியல் வன்முறை

பெண்கள் மீது தொடுக்கப்படுகின்ற பாலியல் வன்முறைக்கும் துன்புறுத்தலுக்கும் புறக்கணிப்புக்கும் பிற்போக்காகச் சித்திரிப்பதற்கும் அடிப்படையாக அமைந்துள்ள பெண்களுக்கெதிரான ஆணாதிக்கக்கட்டமைப்பு பண்பாட்டின் வழி உருவானதாகும். இதன் காரணமாக ஆண் தன்னை ஆள்பவனாகவும் பெண்ணை தன் ஆளுகைக்கு உட்படுபவளாகவும் கருதி அடக்குமுறையைப் பிரயோகிப்பதோடு பெண்ணின் இயற்கையாக அமைந்த உடலியலை பாலியல் உணர்வைப் பிரயோகிக்கும் பொருளாகக் கருதி பெண்மீதான வன்முறையினையும் மேற்கொள்கின்றான். பெண்களை காம இச்சைக்குரிய பொருளாகப் பார்க்கின்ற மனநிலையின் வெளிப்பாடாக ஒரு கட்டத்தில் அது பெண்களுக்கெதிரான பாலியல் வன்புணர்வாகவும் மாறுகின்றது. பெண்களை பாலியல் பொருளாகவே நோக்கும் ஆண்களின் நடத்தையை கேள்விக்குட்படுத்தும் பெண்களின் படைப்புகளுள் நிரூபாவின் சிறுகதைகளும் முக்கியமானவை. நிரூபாவின் பல கதைகளில் பெண் தனது கணவனாலும் தெரிந்தவர்களாலும் மற்றவர்களாலும் பாலியல் ரீதியில் துன்பங்களை அனுபவிப்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பெண் துன்புறுத்தலுக்கும் கொடுமைக்கும் உள்ளாக்கப்படும் முக்கிய இடமாக குடும்பம் அமைவதுடன் வன்முறையைப் பிரயோகிப்பவனாக கணவன் காணப்படுகின்றான். மென்மை, பணிவு, அடக்கம், அச்சம், நாணம், விட்டுக்கொடுத்தல், இயைந்து போதல், முதலானவை பெண்ணின் இன்றியமையாத பண்புகளென்றும் சமைத்தல், உடுபுடவை துவைத்தல், குழந்தைகளைப் பெற்றெடுத்தல், பராமரித்தல், பாடசாலைக்கு அனுப்புதல், கணவனுக்குரிய கடமைகளை நிறைவேற்றி கணவனை கண்கண்ட தெய்வமாகப் போற்றுதல் வேண்டுமென்றும் கருதும் தந்தை வழி ஆணாதிக்க மனோநிலை கொண்டவர்களாக பெரும்பாலான ஆண்கள் காணப்படுகின்றார்கள். இதற்கும்மேலாக பெண் உடல் பாலியல் உணர்வைத் தீர்க்கும் பண்டம் என்ற அகோர எண்ணமும் சில ஆண்களிடம் உண்டு. இத்தகைய ஆண் வர்க்கத்துடன் இணைந்து குடும்பமாக வாழும் பெண்கள் மிகவும் கொடுமையாக வன்முறைக்கு உள்ளாகுகின்றார்கள். பெண்ணை அடிமைப்படுத்துவதில் குடும்பம் முக்கியம் பெறுகின்றது.

புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழ் இளைஞர்களுக்கு அல்லது அங்கு பிறந்த இலங்கைத் தமிழ் இளைஞர்களுக்கு இலங்கையிலுள்ள தமிழ்ப் பெண்களை மணமகளாகப் பேசி திருமணம் செய்து வைக்கின்ற வழக்கம் உண்டு. தன்னைத் திருமணம் செய்யப்போகும் ஆண் எத்தகையவன், அவனது குணநலங்கள் எப்படிப்பட்டவை என்றெல்லாம் அறிந்திராத பெண், புகலிட நாட்டுக்குச் சென்று, மாப்பிள்ளையாக காத்திருந்த ஆணைச் சந்தித்த முதல் நாள் தொடக்கம் வாழ்ந்த காலம் முழுவதும் பாலியல் ரீதியாக அடைந்த கொடுமைகளை எடுத்துக் கூறுவதாக நிரூபாவின் 'லூமினா நேபிலா' என்ற கதை அமைந்துள்ளது. ரொறன்ரோ விமான நிலையத்தில் இறங்கி தன்னைத் திருமணம் செய்யப்போகும் மணமகன் வரும் வரையும் காத்திருந்த பெண் அங்கே வந்த மாப்பிள்ளையால் எவ்வாறு நோக்கப்பட்டாள் என்பதை பின்வரும் பகுதி எடுத்துக்கூறுகின்றது:

> **அவர் எப்ப வருவார் என்று காத்திருந்தன என் கனவுகள். அவர் வந்ததும் என்னை ஒரு முறை ஏற இறங்கப்பார்த்து 'என்ன உம்மடை காலும் கையும் மொத்தமாக் கிடக்கு. படத்தில தெரியேல்ல' என்று கேட்டார். நான் என்ர காலை ஒல்லியாக்கியோ மறைத்தோ படம் எடுக்கவில்லை.**
>
> **என்னையும் கேட்காமல் சடாரென்று கட்டியணைத்து வாயில் முத்தமிட்டார். எனக்குப் பிடிக்கவேயில்லை. வாரிப் போட்டது (நிரூபா, 2018:33).**

முதன்முதலில் நேரில் சந்தித்தவுடன் தன்னுடல் உறுப்புகள் எத்தகையனவாக இருக்கின்றனவென்ற முரட்டுத்தனமான மனப்பாங்கே அவ்வாணிடம் காணப்பட்டதென்பதையும் அத்தகைய செயற்பாடு தனக்குப் பிடிப்பற்றிருந்ததென்பதையும் மேற்படி கூற்று உணர்த்துகின்றது.

மனைவியின் மனவுணர்வுகள் எவற்றையும் புரிந்துகொள்ளாது மிருகக்குணத்துடன் தன்னை உடல், உள ரீதியாகக் கொடுமைப்படுத்தும் கணவனாகக் காணப்பட்டதை அப்பாத்திரம் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றது:

> **இரவில்தான் கட்டில்களுக்கு வேலை அதிகம் என்பார்கள். சில காட்டு மிராண்டிகளின் வாழ்க்கையே கட்டிலிலும், கட்டில் கனவுகளிலும் மட்டும்தான் கழிகின்றது.**
>
> **அவன் தந்த வலி என் அடிவயிற்றிலிருந்து எழுந்து கால்கள் வரை வந்து ஏன் மேலெழுந்து தலையின் உச்சிக்குள்ளும் ஒரு புழுவாய் ஊர்ந்துகொண்டிருக்கின்றது. இந்தக்கட்டில்தானே அறியும். காதல் என்பதன்அர்த்தமே அறியா காமக் கிளர்ச்சியில், என்யோனிக்குள்**

கிளறப்பட்ட வலியின் வெடுக்குகளை அவை உணரும். காட்டு மிராண்டி நாய்!

புருஷன் இல்லை மனுசன் என்று கூடச் சொல்ல நாக் கூசுகின்ற அந்தத் தறுதலை. அவனுக்காக இப்போது மட்டுமல்ல எப்போதுமே என் கட்டில்களும் மனமும் காத்திருந்ததில்லை. அவை அவனைக் காறித் துப்பும். அவனுக்காக என் எதுவுமே காத்திருக்கா. ஆனால் அவன் குறி என்மேல் பாய்ச்சத் துடித்துக்கொண்டேயிருக்கும். எந்தக்குறியை எங்கு நீங்கள் புத்தகங்களில் புதைத்து சாவு விழாக்கொண்டாடினாலென்ன? குறிகள் எப்போதுமே தம் இலக்கிலிருந்து மாறுவதில்லை (நிரூபா, 2018:30-31).

அதேவேளை சந்தேகத்தோடு பல கேள்விகளைக் கேட்டுக்கொண்டே தன்னைப் பாலியல் கொடுமைக்கு உள்ளாக்கிய பெண்ணின் வாக்குமூலமாக இச்சிறுகதையில் வரும் கூற்று அமைந்துள்ளது. அது பின்வருமாறு:

‘ஏன் வேண்டாம். முந்தி... இத மாதிரி....?’

‘இப்ப வேண்டாம்’

‘இப்ப வேண்டாட்டி எப்ப...?’

‘எனக்குப் பிடிக்கேல்ல’

‘என்னைப் பிடிக்கேல்லையோ? அப்ப ஆரைப் பிடிச்சிருக்கு?’

‘எனக்கு ஒருத்தரையும் பிடிக்கேல்ல. பிளீஸ் விடுங்கோ.’ தப்பிக்க முடியாத பூனைக்குட்டிபோல் திரண்டும் அமுக்கப்பட்டும் கிடந்தேன். கேள்விகளும் தாடி மயிர்களும் முட்களைப்போன்று கன்னங்களிலும் நெஞ்சிலும் குத்திக்கொண்டிருந்தன.

‘உம்மோடை படிச்ச பெடியள் இங்க இருக்கினமோ?’

‘என்னோட படிச்ச என்ர சொந்தக்காரப் பெடியன் ஒண்டு இயக்கத்தில போய் செத்துப்போனான். அம்மா சொல்லி அனுப்பினவா எந்த நேரத்தில் கேட்டாலும் உள்ளதைச் சொல்ல வேணுமெண்டு.’

‘சொல்லும்’

‘ஒருத்தன் நோர்வேல. ஒருத்தன் சுவிசில....’

என்னை ஏதோ அமுக்கிக்கொல்வது போன்றிருந்தது. கேள்விகள் தொடர்ந்தன....

'அவையள் ஒருத்தரோடையும் தொடர்பில்லையோ?'

'இல்லை'

'நீ இங்க வாறதெண்டு அவையளுக்கு தெரியுமோ?'

'தெரியாது.'

'அவயளின்ர போன் நம்பர் கொண்டுவந்தனிரோ. சொல்லுமன். ஏன் ஊமை மாதிரிக் கிடக்கிறீர்?'

எனக்கு எதுவுமே கேட்கவில்லை. எனக்குள் தடி ஒன்று புகுத்தப்பட்டு குத்துவதுபோல் இருந்தது. அது என் வயிறுவரை குத்திக்கொண்டிருந்தது. அது வயிற்றுக்கு வெளியில் விந்துவிடுமோ என்று பயமாக இருந்தது. என் கைகள் நசிக்கப்பட்டு மார்புகள் பச்சை மிளகாய் தேய்த்தது போன்று எரிந்து கொண்டிருந்தன. என் பால் உறுப்பு பீச்சல் பயத்தில் தன்னிய திரவம் எதுவென்று தெரியவில்லை. அவன் பிடியிலிருந்து எழுந்து பார்த்தேன் என் படுக்கை முழுக்க ரத்தம். ஐயோ அம்மா என்றழுதபடி குளியலறைக்குள் ஓடினேன்.

எனக்கு அப்போது தெரியாது அவன் மீண்டும் இன்னொரு ஆட்டத்திற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறான் என்பது (நிரூபா, 2018:36-37).

கணவன் என்ற பெயரில் உணர்வற்ற உடல்மீது நடத்தப்பட்ட வன்முறையினை மேலுள்ள வரிகள் குறிப்பிடுகின்றன. பாதிக்கப்பட்ட பெண்ணின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் வலியை வெளிப்படுத்தி யதார்த்தத்தைப் பறைகின்றன.

பெண்நிலைவாதம் பெண்ணை மனித நேயத்துடன் மனவுணர்வுகளுக்கு மதிப்பளித்து ஒரு மனுஷியாக வழிநடத்தப்படுவதை முன்னிலைப்படுத்துகின்றது. பெண்கள் கணவன்மாரால் கொடுமைப்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இக்கோசமே ஓங்கி ஒலிக்கின்றது. பெண்ணின் உணர்வுகளை அங்கிகரித்து அவளை ஒரு சக தர்மியாக வழிநடத்துகின்ற அன்புக்குரியவனே கணவனாக இருக்க இயலுமையுடையவன். கணவனே மனைவியைக் கொடுமைப்படுத்துகின்ற கொடுமைக்காரனாக மாறுகின்றபோது பெண் அடைகின்ற துன்பத்தின் அளவு எல்லையற்றதாகிவிடுகின்றது. கணவனாக இருந்துகொண்டு எல்லா நேரங்களிலும் வெறித்தனத்துடன் நடந்துகொள்வதையும் தான் துன்பப்படுவதைச் சிறிதும்

பொருட்படுத்தவில்லையென்பதையும் நிரூபாவின் 'லூமினா நேபிலா' என்ற சிறுகதையின் பின்வரும் கூற்று பகிரங்கப்படுத்துகின்றது.

> **அவன் வந்தான். களற்றினான். ஏறிப்படுத்தான். நான் வயிற்று வலியில் துடிப்பது பற்றி கவலையில்லை. அவன் கவலை வேறு 'வந்திருந்தால் நல்லாயிருக்கும்.' என்றான். குருதியில் குளிப்பதில் குறிகளுக்குத்தான் எத்தனை ஆனந்தம்? அந்த மூன்று நாலு நாட்கள் நான் படும் வேதனை அறியாத நாய். குருதி குடிக்கும் வம்பயர் பிசாசு (நிரூபா, 2018:30)**

கணவன் என்ற காரணத்தை வைத்து, ஆணாதிக்கத்தினால் நடத்தப்படும் பாலியல் வன்கொடுமையினை வன்மையாக எதிர்க்கும் வகையில் நாய், குருதி குடிக்கும் வம்பயர் பிசாசு முதலான சொற்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளமையை மேற்படி உரைப்பகுதி மூலம் காணலாம்.

பெண்ணுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும் தாய்மைத்துவம் துன்பத்தையும் கொடுப்பதாக அமைந்துள்ளது. பாலியல் கொடுமைப்படுத்தலைச் சந்திக்கும் அதேவேளை கருத்தரிக்கும் நிலை ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் தனக்குள் உருவாகியிருக்கும் கருவை பாதுகாக்கும் மனிதாய சிந்தனையும் பெண்ணை ஆட்கொள்ளும்போது அக்கருவை விரும்பாதவனாக கணவன் இருக்கும் சந்தர்ப்பம் ஏற்படுகையில் இரட்டிப்பான உடல், உள பாதிப்பினை எதிர்கொள்ளவேண்டிய நிலை உருவாகின்றது. கருத்தரித்திருக்கையில் பலாத்காரமான பாலியல் வன்முறையை ஆண் பிரயோகிக்கும்போது பெண் எதிர்கொள்ளும் துயரம் நிரூபாவின் கதையில் எடுத்துக்கூறப்பட்டுள்ளது. பின்வரும் பகுதி அதற்கு எடுத்துக்காட்டாக அமைகின்றது:

> **அவனுக்கு ஒரு மனசு இருந்ததா? நான் பதட்டத்தில் என் வயிற்றைப் பொத்திப் பிடித்தேன். என்னுடைய ஐந்து மாதக் குழந்தை பயந்துவிடாதபடி அதை அணைத்துக் கொண்டேன். பிறகு என்ன செய்தான் தெரியுமா? என்னைப் பரிசோதித்த வைத்தியர் என்னை அளைந்து பார்த்திருக்கக்கூடும் என்ற சந்தேகத்தில் மணந்து பார்த்தான். பின் அவன் விளையாடத் தொடங்கினான். இப்போதுதான் வானத்திலிருந்து மெதுவாக இறங்கி வரும் பனித்துளி போன்ற என் குழந்தை மிரண்டு போய்க் கிடந்தது. அவன் என் குழந்தைகள் எல்லாவற்றையும் கருவிலேயே மிரள வைத்தவன்தானே! (நிரூபா, 2018:40).**

கணவனால் மட்டுமன்றி சமூகத்திலுள்ள ஆண் வர்க்கத்தாலும் பாலியல் துன்புறுத்தல் தொடுக்கப்படுவதையும் நிரூபா கதைகளினூடாக வெளிப்படுத்தியுள்ளார். புகலிட நாட்டின் பண்பாட்டுக்கு அமைய புலம்பெயர்ந்து சென்ற பெண்களை பாலியல்

ரீதியில் அணுகும் தமிழ் இளைஞர்களின் செயலை 'தஞ்சம் தாருங்கோ' என்ற கதையில் வெளிப்படுத்தியுள்ளார். தம்விருப்பத்திற்கு ஏற்ப பெண்ணை உட்படுத்தலாம் என்று கருதியோருக்கு பலத்த எதிரிவினையாற்றலாக இக்கதையில் பாதிக்கப்பட்ட பெண்ணின் வார்த்தைகள் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

பெண்ணின் உடல், உடல் சார்ந்த அனுபவங்கள் அவருக்கே உரியன. அவை அவரின் எழுத்தில் பரிணமிக்கும்போது அவ்வெழுத்து பெண்மய எழுத்தாக விளங்கி, ஆணின் பெண்குறித்த மதிப்பீடுகளை பொய்மைகளைத் தகர்த்து எறிவதாக அமைந்துவிடுகின்றன (கற்பகம், ந., 2010:66). நிரூபாவின் படைப்புகளும் வெறும்புனைவுகளாக அல்லாமல் அனுபவங்களை சுதந்திரமாகவும் யதார்த்தமாகவும் வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. பெண் என்ற அடையாளத்துடன் குடும்பம், சமூகம், மதம், பண்பாடு முதலானவற்றிலிருந்து பிரயோகிக்கப்படும் ஆணாதிக்க அடக்குமுறைகளுக்கெதிரான பலமான எதிர்ப்பை வெளிப்படுத்துவதோடு பெண் அடையாளத்தையும் நிலைநிறுத்துவனவாக உள்ளன. மேலும் இவரது கதைகள் பெண்களுக்கெதிராக தொன்று தொட்டு உருவாக்கப்பட்ட கருத்தாக்கங்களை - ஆண் அரசியலை தோலுரித்துக்காட்டும் மாற்று அரசியலாக அமைந்துள்ளன. பாதிக்கப்பட்ட பெண்ணால் அன்றி பிறிதொருவரால் சொல்லமுடியாத உணர்வின் மொழி கதைகள் முழுவதும் ஊடறுத்து நிற்கின்றது.

இவ்வாறு பெண்கள் பேசத்தயங்குகின்ற ஆண்களால் மேற்கொள்ளப்படும் பாலியல் கொடுமைப்படுத்தல்களை இவர் தனது வீச்சான மொழியால் வெளிப்படுத்தியுள்ளமை இவரது சிறுகதைகளுக்குரிய தனித்துவமாகும். இவை தவிர மார்பு, யோனி முதலான உடலுறுப்புகள் எவ்வாறு ஆண்களின் பாலியல் வன்புணர்விளால் பாதிக்கப்படுகின்றன என்பதையும் வெளிப்படையாகவே பேசியுள்ளார். இத்தகைய மொழிப்பயன்பாடு ஆணாதிக்க வாதிகளை அதிர்ச்சியூட்டும் தன்மையுடையது தவிர பெண் தொடர்ந்தும் ஒடுக்குமுறைகளை அனுபவித்துக்கொண்டும் அவற்றை மறைத்துக்கொண்டும் வாழப்போவதில்லை என்பதையும் திடமாக முன்வைக்கின்றது.

முடிவுரை

நிரூபாவின் சிறுகதைகள் பெண்கள் எதிர்நோக்கும் பாலியல் கொடுமையை, ஆணாதிக்க அடக்குமுறைகளை, தன்னுணர்வுகளைப் புடம்போட்டுக்காட்டும் மாற்று அரசியலை முன்வைக்கின்றன, அடக்குமுறையிலிருந்து பெண்ணை விடுவிக்கும் கோசத்தினை எழுப்புகின்றன, பெண்கள் குடும்பத்தில் எதிர்நோக்கும் சொல்லொண்ணாத் துயரினை வெளிச்சமிட்டுக்காட்டுகின்றன. இவ்விதத்தில் இவரது சிறுகதைகள் புகலிடத்

தமிழ் இலக்கியத்தில் ஒடுக்கப்படும் பெண்ணின் குரலை அழுத்தமாகப் பதிவுசெய்துள்ளவகையில் முக்கிய கவனிப்புக்குரியவையெனலாம்.

துணைநூற்பட்டியல்

1. கற்பகம்,ந.(2010). 'கவிதா': பெண் மொழி - வெளி தமிழகப் பெண் கவிஞர்களின் கவிதைகள் குறித்த உரையாடல்கள், தீபா,ஏ.,தரியரீகன்,சா., குமார்,ர.(பதி) சென்னை: பரிசல்
2. நிரூபா, (2018). இடாவேணி, புதுச்சேரி: அணங்கு பெண்ணியப்பதிப்பகம்.
3. மல்லிகா, அரங்க, (2018): 'தற்காலத்தமிழ் இலக்கியத்திறனாய்வும் பெண்ணியப்போக்கும்', தமிழ் இலக்கியத் திறனாய்வுக் கோட்பாடுகள், காமராசு,இரா.,(பதி) புதுடில்லி: சாகித்திய அகாதெமி.

REFERENCES

1. Katpakam, N. (2010). 'Kavitha': Pen: Mozhi – Veli Thamilaka Pen Kavignarkalin Kavithaikal Kiriththa Uraiyaadalkal, Theepa,A., Kumar,R.(Pathi). Chennai: Parisal.
2. Nirupa, (2018). Idaaveni, Puthuchxheri: Anangu Penniyappathippakam.
3. Mallika, Aranka, (2018): 'Thatkaalath thamil ilakkiyath thiranaauevum Penniyap Pokkum', Thamil ilakkiyath thiranaaievuk Kodpaadukal, Kaamarasu, ira., (pathi). Puthu Dilli: Saakithiya Ahadami